இயல் ஐந்து

கல்வி

# மணற்கேணி




## கற்றல் நோக்கங்கள்


- மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையையும் நுட்பத்தையும் உணர்ந்து மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்தல், புதிய பகுதிகளைத் தேவைக்கேற்ப மொழிபெயர்த்தல்.
- கல்வி சார்ந்த கருத்துகளைச் செய்யுள் வாயிலாக அறியவும், சுவைக்கவும், இன்றைய கல்வியுடன் ஒப்பிடவும் அறிதல்.
- படித்துப் பொருள் உணர்வதுடன் கருத்துகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி எளிமையாக வழங்கும் திறன் பெறுதல்.
- பொருள்கொள்ளும் முறையறிந்து செய்யுளின் பொருளைப் புரிந்துகொள்ளுதல்.

கல்வி
௫

# மொழிபெயர்ப்புக் கல்வி

**நுழையும்முன்**

ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறுதுறைகளில் உச்சங்கள் இருக்கும். மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும். நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு.


HYMNOLOGIA
DAMULICA
SIVE
EX GERMANICO IN DAMULORUM IDIOMA, OBSERVATIS USQUE ET MELODIIS ET RHYTHMIS ODARUM, TRANSLATORUM
CENTUM ET SEXAGINTA
HYMNORUM
SPIRITUALIUM
FASCICULUS:
in
Gratiam Juventutis Damulicæ æque ac Ecclesiæ hujus Gentis, Chriſto Nomen dantis, exhibita
a
BENJAMIN SCHULTZE
Miſſionario ad Indos Orientales.
TRANQUEBARIÆ, In littore Coromandelino
Typis & ſumptibus Miſſionis Danicæ
Anno MDCCXXIII.

டேனிஷ் கிறித்துவ நிறுவனத்தால் 1723ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் மொழிபெயர்த்து அச்சுருவாக்கம் பெற்ற தமிழ் நூல்.

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

"ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்.

## மொழிபெயர்ப்பு – தொடக்கம்

*மொழிபெயர்த்தல்* என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி



10th_Tamil_Unit 5.indd 100 12/08/2021 6:56:53 PM

வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

### மொழிபெயர்ப்பு – தேவை

மொழிபெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது; ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT), தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

மொழிபெயர்ப்பின் தேவையை உணர்த்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறார்கள். உலகப் போரின்போது அமெரிக்கா, "சரண் அடையாவிடில் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹீரோஷிமாவில் குண்டுவீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்குப் பொருள், 'விடைதர அவகாசம் வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள், 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர். இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது எனலாம்.

**பாரதியின் மொழிபெயர்ப்பு**

*Exhibition* – காட்சி, பொருட்காட்சி

*East Indian Railways* – இருப்புப் பாதை

*Revolution* – புரட்சி

*Strike* – தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலை நிறுத்தம்

### மொழிபெயர்ப்பு – கல்வி

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்; நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### இலக்கிய இறக்குமதி

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. இலக்கியம் என்பது தன்



10th_Tamil_Unit 5.indd 101 12/08/2021 6:56:53 PM

அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.

18ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.

மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது; ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது; கம்பன் இருந்திருக்க முடியாது. இரவீந்திரநாத தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது. மகாகவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலகஅளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும். ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள். அதுபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

நேரடி மொழிபெயர்ப்பாக பிரஞ்சு, ஜெர்மன், ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முதலான நாடுகளின் நூல்கள் இன்று கிடைக்கத் தொடங்கியிருப்பது நல்ல பயனை அளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம். இன்றுள்ள புதிய

### தெரிந்து தெளிவோம்

**மொழிபெயர்ப்பு**

எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் மொழியில் சொன்னவற்றை, எழுதியவற்றை இன்னொரு மொழியில் தமக்குத் தெரிந்த மொழியில் மொழிபெயர்த்து அறிந்து கொள்கிறார்கள். அதுதான் மொழிபெயர்ப்பு.

எப்பொழுது உலகத்தில் நான்கைந்து மொழிகள் உருவாயினவோ அப்பொழுதே மொழி பெயர்ப்பும் வந்துவிட்டது. கருத்துப்பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் என்பன எல்லாம் மொழிபெயர்ப்பு வழியாகவே சர்வதேசத்தன்மை பெறுகின்றன.

ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார். 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இன்றுவரையில் 'வால்காவிலிருந்து கங்கை வரை' ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது. இதுவரையில் பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

1949 – கணமுத்தையா மொழி பெயர்ப்பு, 2016 – டாக்டர் என்.ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு, 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு, 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு.

சா. கந்தசாமி



10th_Tamil_Unit 5.indd 102 12/08/2021 6:56:54 PM

திறனாய்வு முறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம்.

பிறமொழி இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள் பலவும் தமிழுக்கு அறிமுகமாகி அது போன்ற முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

### மொழிபெயர்ப்பு – செம்மை

Hundred railsleepers were washed away என்பதை, தொடர்வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறுபேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் வெளியிட்டது. Railsleeper என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும். அதனை உறங்கிக் கொண்டிருந்தோர் என மொழிபெயர்த்தது பெரும்பிழையே.

Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இருபொருள் உண்டு. ஊசி காதில் வடம் நுழையாது என்னும் வேற்றுமொழித் தொடரை 'ஊசி காதில் ஒட்டகம் நுழையாது' என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம். இத்தொடரில் வடம் என்பதே பொருத்தமான சொல்லாக அமையும் (அதாவது ஊசி காதில் நூல் நுழையுமே அன்றிக் கயிறு நுழையாது என்பதே). மொழிபெயர்ப்புகள் கழிவின்றி, சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

'Underground drainage என்ற தொடரை மொழிபெயர்ப்பதில் தடுமாற்றம் வந்தது. பாதாளச் சாக்கடை என்பது போன்றெல்லாம் மொழிபெயர்த்தனர். தமிழோடு தொடர்புடைய மலையாள மொழியில் பயன்படுத்திய புதைசாக்கடை என்ற சொல் பொருத்தமாக இருப்பதைக் கண்டனர். அதையே பயன்படுத்தவும் தொடங்கினர்.

Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிறபோது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலைஅளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு மாறாக, Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. இவ்வாறு இடம்பார்த்து மொழிபெயர்ப்பு, முறையாகச் செய்யப்பட வேண்டும்.

### பல்துறை வளர்ச்சி

இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

### மொழிபெயர்ப்பு – பயன்

இது மொழிபெயர்ப்புக் காலம். காலையில் எழுந்தவுடன் நாளிதழ்ப்படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது. இரவு தொலைக்காட்சியில் காணும் கேட்கும் செய்திகளும் மொழிபெயர்ப்பு மூலமே கிடைக்கின்றன. இடையில் நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்துகொண்டே இருக்கிறது.



10th_Tamil_Unit 5.indd 103 12/08/2021 6:56:54 PM

- இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க – அரசியலை உருவாக்க – பொருளியலை உருவாக்க – சமூகவியலை உருவாக்க – இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பே உதவுகிறது. மொழிபெயர்ப்பு, மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும் இணைக்கிற நெடுஞ்சாலையாக இருக்கிறது; காலத்தால் இடத்தால் மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது; கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் அது மனிதவாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது; பல மொழிகளிலும் காணப்படும் சிறப்புக்கூறுகளை எல்லாம் ஒருங்குசேர்த்து அனைவருக்கும் பொதுமையாக்குகிறது. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள்வரை மொழிபெயர்க்கப்படுகின்றன. புள்ளிவிவரப்படி அதிகமான தமிழ்நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம்; இரண்டாமிடம் மலையாளம்; அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்தி மொழி போன்றவை இடம்பெறுகின்றன.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது; பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

### மொழிவளர்ச்சி

நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான். இதன்மூலம் புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான். செய்யுளையே தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்டபோது உரைநடை வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது தமிழ், ஆங்கிலத் தொடரமைப்புகளையும் கூறுகளையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மொழிபெயர்ப்பு இத்தகைய மொழிப் பிரச்சினைகளைக் கடந்து, அதன் தீர்வாக மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

### எதை மொழிபெயர்ப்பது?

எந்த மொழிபெயர்ப்பாக இருப்பினும் எதை மொழிபெயர்ப்பது என்ற முன்னுரிமை வேண்டும். ஒரு மொழியின் குப்பைகள் இன்னொரு மொழிக்குப் போய்விடக் கூடாது. பழைய நூல்களையே அறிமுகப்படுத்தும் போக்கை விட்டுப் புதுப்புது நூல்களையும் அறிமுகப்படுத்தும் நிலை வளர வேண்டும். ஒரு குறிப்பிட்ட சிறு குழுவில் பேசப்படும் மொழியில் இருப்பவையும் கூட நம்மை வந்தடைய வேண்டும். சிறு குழுவினர் பேசும் ஆப்பிரிக்க மொழிகளின் படைப்பாளர்கள் நோபல் பரிசு பெறுகிறார்கள். ஆனால் அந்தப் படைப்புகள் நம்மை எட்டுவதில்லை. தமிழின் தொன்மையான இலக்கியங்கள் முன்னரே மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகமாகியிருந்தால் தமிழின் பெருமை உலகெங்கும் முறையாகப் பரவியிருக்கும். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்க வேண்டும். இதனை குலோத்துங்கன்,

"காசினியில் இன்று வரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி
பேசி மகிழ் நிலை வேண்டும்"

என்று குறிப்பிடுகிறார்.



10th_Tamil_Unit 5.indd 104 12/08/2021 6:56:54 PM

### செய்ய வேண்டுவன

மொழிபெயர்ப்பு நிறுவனங்களை அமைப்பதும் மொழிபெயர்ப்பைக் கல்வி ஆக்குவதும் மொழிபெயர்ப்புக்கு உதவும் சொற்களஞ்சியங்களை உருவாக்குவதும் ஒரு மொழியின் சிறப்புக் கூறுகளுக்கு இணையான சமன்பாடுகளை உருவாக்குவதும் பட்டறைகள் நடத்துவதும் நூல்வெளியிடுவதும் செய்யப்பட வேண்டும். சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை எல்லா இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளன. வெவ்வேறு படைப்புகள் மட்டுமன்றி, துறைசார்ந்த நூல் மொழிபெயர்ப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் தமிழில் பல நூல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும். அங்கிருந்து கொணர்ந்து சேர்ப்பதோடு அவர் கூறுவது போல,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."

செப்புமொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும். இதற்கு மொழிபெயர்ப்புக் கல்வி இன்றியமையாதது..



**எத்திசையும் புகழ் மணக்க.....**

**பிரான்சு தேசிய நூலகத்தில் தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும்**

*பிரான்சு "தேசிய நூற்கூடத்தில் (Bibliothque Nationale) ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள. இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும் ஏடுகளுமாம். பண்டைக் காலத்தில் முதன்முதலாக ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூற்கூடத்தில் இருக்கின்றன. அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியலைப் படித்தபொழுது இன்றும் அச்சிடப்பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். "மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ்" முதலிய நூல்களும் அங்கு உள."*

– *தனிநாயக அடிகள்*



## கற்பவை கற்றபின்...

1. தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.

2. மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச்சுருக்கத்தையும் உங்கள் கருத்துகளையும் வகுப்பறையில் கூறுக.




10th_Tamil_Unit 5.indd 105 12/08/2021 6:56:55 PM

கவிதைப் பேழை

# கல்வி
# ரு

# நீதிவெண்பா

*– கா.ப.செய்குதம்பிப் பாவலர்*




கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம். தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள். கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திலிருந்து தற்காலம்வரை தொடர்கின்றனர் தமிழர். பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல, நூல்களை நாடிச் சென்று அறிவு பெறவேண்டும்.

*அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*
*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*
*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*
*பொருத்துவதும் கல்வியென்றே போற்று.* *



### பாடலின் பொருள்

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

### சதாவதானம்

'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

### நூல் வெளி



'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கிய செய்குதம்பிப் பாவலர் (1874 – 1950), கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்; சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்; 1907 மார்ச் 10ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டுப்பெற்றார். இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன. இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.



## கற்பவை கற்றபின்...

எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.



10th_Tamil_Unit 5.indd 106 12/08/2021 6:56:55 PM

கவிதைப் பேழை

கல்வி

ரு

# திருவிளையாடற் புராணம்

– *பரஞ்சோதி முனிவர்*

**நுழையும்முன்**


கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புச் செய்வது தமிழ்கூறும் நல்லுலகம். அரசரும் புலவருக்குக் கவரி வீசுவர்; கண்ணுக்கு எட்டிய திசை வரை தெரியும் நிலங்களைப் புலவருக்குக் கொடை கொடுத்து மகிழ்வர்; இறைவனும் அறிவைப் போற்றுபவன்; அறிவாய் நிற்பவன்; அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்றவன்; புலவரது அறிவுப் பெருமையை உணர்த்துபவன்.

R94K6

*காண்டம் :* *திரு ஆலவாய்க் காண்டம்(3)*

*படலம் :* *இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் (56)*

*படலச் சுருக்கம்*



*பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட,அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிருஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.*

## இடைக்காடனார் மன்னனின் அவையில் கவிதை படித்தல்

1. *கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்*
*பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்*
*மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன்*
*வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து உரைப்பனுவல் வாசித்தான் ஆல்.* (2615)

**சொல்லும் பொருளும் :** கேள்வியினான் – நூல் வல்லான், கேண்மையினான் – நட்பினன்



10th_Tamil_Unit 5.indd 107 12/08/2021 6:56:56 PM

## மன்னன் தன் புலமையை மதிக்காமை குறித்து இறைவனிடம் முறையிடல்

2. சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி. (2617)

**சொல்லும் பொருளும் :** தார் – மாலை, முடி – தலை

3. என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி. (2619)

**சொல்லும் பொருளும் :** முனிவு – சினம்

## இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்

4. போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றான்
ஞானமய மாகியதன் இலிங்கவுரு மறைத்துஉமையாம் நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோவிலின்நேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்டு அங்கு இனிதின் அமர்ந்தான் மன்னோ. (2620)

**சொல்லும் பொருளும் :** அகத்து உவகை – மனமகிழ்ச்சி

## கோவிலைவிட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை வேண்டுதல்

5. அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து
எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ் நாட்டில் எய்திற்றாலோ
தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம் தருமம் சுருங்கிற்றாலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்! எந்தாய்!. (2629)

**சொல்லும் பொருளும் :** தமர் – உறவினர்

## இறைவனின் பதில்

6. ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா. (2637)

**சொல்லும் பொருளும் :** நீபவனம் – கடம்பவனம்

## மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனிடம் வேண்டுதல்

7. பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே. (2638)

**சொல்லும் பொருளும் :** மீனவன் – பாண்டிய மன்னன்

## மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்

8. விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி. (2641)

**சொல்லும் பொருளும் :** கவரி – சாமரை ( கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

## மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

9. புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. * (2644)

**சொல்லும் பொருளும் :** நுவன்ற – சொல்லிய, என்னா – அசைச் சொல்

## பாடலின் பொருள்

1. 'குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன்' எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.
2. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.
3. இடைக்காடனார் இறைவனிடம், "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.
4. கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.
5. "இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.
6. இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்றார்.

7. வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

8. மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது; அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரண கும்பம் கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

9. பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர்.

### இலக்கணக் குறிப்பு

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்

காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை

### பகுபத உறுப்பிலக்கணம்

தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து

தணி – பகுதி, த் – சந்தி

த்(ந்) – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – சாரியை, து – படர்க்கை வினைமுற்று விகுதி

**சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்**

ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்; அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர். உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார். அப்பாடல் இதோ...

"மாசற விசித்த வார்புறு வள்பின் ..." புறம் 50

### நூல் வெளி



திருவிளையாடற் கதைகள் சிலப்பதிகாரம் முதற்கொண்டு கூறப்பட்டு வந்தாலும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமே விரிவும் சிறப்பும் கொண்டது. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது; பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர்; பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; சிவபக்தி மிக்கவர். வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன இவர் இயற்றிய வேறு நூல்களாகும்.

## கற்பவை கற்றபின்...

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.



10th_Tamil_Unit 5.indd 110 12/08/2021 6:56:57 PM


விரிவானம்

கல்வி

௫

# புதிய நம்பிக்கை

*– கமலாலயன்*




வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள்; சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக ஆக்குகிறார்கள்; பலரின் பயணங்களுக்கு வழிவகுக்கிறார்கள்; கல்வி அறிவற்ற இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையை அறிவது கல்வி வரலாற்றை அறிவதாகும்.



ஒவ்வொரு நாளும் காலை ஐந்து மணி அவர்கள் விழித்து எழும் நேரம். அவர்களுக்குப் பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலைகள் இருந்தன. ஒரு நாளில் ஒரே ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கி விடக்கூடாது என்று நினைக்கும் குடும்பம் அது.

பருத்திக் காட்டில் இருந்து பகலில் அம்மா பாட்ஸி மட்டும் வீட்டிற்குத் திரும்புவாள், தனது குடும்பத்தினருக்கு உணவு சமைக்க. உணவு தயாரானதும் ''பசியார வாங்க செல்லங்களே'' ஓங்கிக் கூப்பிடுவார், வீட்டு வாசலிலிருந்து. ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு உயரமுமாக இருந்த அந்தக் குடும்பத்தார் வயல்வெளியிலிருந்து வியர்வை சொட்டச் சொட்ட வீட்டினுள் நுழைவர்.

''ஓ.. மேரி.. மெதுவா மெதுவா.. மற்றவர்களை முந்திக்கொண்டு அவள் வீட்டு வாசலைத் தொட்டுவிட்டாள். மேரியின் தந்தை சாம் சிரித்துக்கொண்டார். தனது பிள்ளைகளில் மேரிஜேன் மிகவும் வித்தியாசமான பெண்ணாக இருக்கிறாள் என்பதைப்பற்றி அவர் எண்ணிக் கொண்டார்.

அந்தக் குடும்பம் உணவு உண்டு முடித்ததும் மறுபடியும் வயலுக்குத் திரும்பியது. மேரி தனது வேலையை முடித்துவிட்டுப் பாட்டியிடம் ஓடினாள். அவளுக்கு மாலைப்பொழுதில் மிக மகிழ்ச்சி நிறைந்தது இந்த நேரம்தான். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுவதும் பிரார்த்தனை செய்வதும் இந்த நேரத்தில்தான்.

மேரியின் மென்குரல், சூரிய வெப்பத்தை ஊடறுக்கும் குளிர் நீரோடையைப் போல் சன்னமாக ஒலிக்கும். அவள், தானே பேசிக் கொள்வாள். "பருத்திச் செடி வளர்வதற்கு ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது?"

பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. பருத்திச் செடியில் அரும்புகின்ற முதல் பூ மொட்டைப் பார்க்கிற முதல் ஆளாக, தானே இருக்க வேண்டும் என்ற விருப்பம்தான் அது.

முதல் பூவை மேரி பார்த்துவிட்டாள்! ஒரு கணம் திகைத்தாள்.

"ஹே..ய்! முதல் பூ, முதல் பூ.. இங்கே.. இங்கே!"
"எங்கே..? எங்கே..?" "
நான்தான் முதலில் பார்த்தேன்.

நான்தான், நான்தான்!'' என்று கத்தினாள். எல்லோரும் அந்த முதல் பூவைப் பார்க்க

ஓடிவந்தார்கள். அவர்களுக்குத் தெரியும். இனி மூன்றே வாரங்களில் பருத்திப் பூக்களின் செந்நிறத்தினால் வயல்கள் பூராவும் சிவப்பாகிவிடும். அடுத்த ஆறு வாரங்களில் புதுப் பருத்தி நிறைந்துவிடும்.

மேரி இந்தக் கோடைக் கால இரவுகளை மிகவும் விரும்பினாள். தெளிந்த நிர்மலமான வானம். பருத்திப் பூக்களைப் பார்த்துக் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள். இவற்றைப் பார்த்தவாறே சும்மா இலக்கற்றுச் சிந்தித்தபடி இருப்பது அவளுக்குப் பிடித்தமானதாயிருந்தது!

அடுத்த நாள், காலை உணவு முடிந்தது. மேரியின் அம்மா பாட்ஸி துவைத்துத் தேய்த்த துணிகள் நிரம்பிய கனத்த கூடையைத் தலையில் தூக்கிக் கொண்டார். மேரியும் அம்மாவுடன் ஒட்டிக் கொண்டாள். புழுதி படிந்த சாலையில் வெள்ளை முதலாளிகளின் வீடுகளை நோக்கி இருவரும் நடந்தனர்.

அந்த மாளிகை வீடு பென் வில்ஸனுடையது. பாட்ஸியும் மேரியும் பின் கதவுப் பக்கமாகச் சென்றனர். கருப்பின மனிதர்களுக்கு முன்புற வாசலில் அனுமதி கிடையாது. கதவு திறக்கப்பட்டது. பாட்ஸி வீட்டினுள் சென்றுவிட்டார். மேரி வெளியிலேயே இருந்தாள்.

சற்றுத் தூரத்தில் மற்றொரு சிறிய வீடு இருந்ததை மேரி கண்டாள். அது வெள்ளைக் குழந்தைகள் சும்மா ஓடி விளையாடுவதற்கென்றே கட்டப்பட்ட ஒன்று. ''ஹலோ மேரி! உள்ளே வர விரும்புகிறாயா?'' ஒரு வெள்ளைச் சிறுமி கேட்டாள். மேரி தயங்கினாள். தயக்கத்தை ஆவல் வென்றபோது அவள் மெதுவாக வீட்டினுள் நுழைந்திருந்தாள். அங்கிருந்த அழகுமிக்க விளையாட்டுப் பொருட்களையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''எங்களோடு சேர்ந்து விளையாட விரும்புகிறாயா..?''

'' ஆமாம்..'' மேரி பதில் சொன்னாள்.



வீட்டினுள் விளையாடியபடி சுற்றி வந்தபோது ஓர் ஓரத்தில் கிடந்த சிறிய மேசையும் அதன் மீதிருந்த ஒரு பொருளும் மேரியின் கவனத்தை ஈர்த்தன. அந்தப் பொருள் பைண்டிங் செய்யப்பட்ட ஒரு புத்தகம். மேலட்டை ஓவியத்தையும் அச்சிடப்பட்ட புத்தகத் தலைப்பையும் பார்த்து ஆர்வமுற்ற மேரி அதைத் தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

அதைப் புரட்டத் துவங்கியபோது வில்ஸனின் இரு பெண் குழந்தைகளுள் சிறுமியாக இருந்தவள், ''புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக்கூடாது! உன்னால் படிக்க முடியாது..!'' என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

முதலில் மேரிக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு

''சும்மா, அதைப் பார்த்துவிட்டுத் தருகிறேன். நான் ஒன்றும் அதை சேதப்படுத்தி விடமாட்டேன். பத்திரமாக வைத்திருப்பேன்.''

''எனக்கு அது எப்படித் தெரியும்? புத்தகங்கள், படிக்க முடியாதவர்களுக்காக இல்லை! தெரிந்து கொள்...!''

''பத்திரமாக வைத்திருப்பேன்.''

''முடியாது''

''அப்படியானால் உன்னால் அதைப் படிக்க முடியுமா..?'' மேரி கேட்டாள்.

''நிச்சயமாக நான் படிக்க முடியும். விளையாட்டுச் சாமான்களையும் என்னிடம் கொடு'' என்று சொல்லிக்கொண்டே அந்தச் சிறுமி விளையாட்டுச் சாமான்களை மேரியிடமிருந்து பிடுங்கினாள். மேரி மனம் துவண்டாள். நட்புணர்வு அற்ற அந்த இடத்திலிருந்து உடனே வெளியேறினாள். கண்ணீர் பொங்கியது. வெளியே தெளிவாய் ஒளிர்ந்து கொண்டிருந்த காலை வெளிச்சம் அவளுக்கு ஆதரவாக இருந்தது. அவள் அப்படி என்ன பெரிய தவறைச் செய்துவிட்டாள்..?



10th_Tamil_Unit 5.indd 112 12/08/2021 6:56:57 PM

ஒரு புத்தகத்தைத் தொட்டிருக்கிறாள்... அவ்வளவு தானே..?அதற்குப் போய் இப்படியா... வெடுக்கென்று பிடுங்கிவிட்டாளே...! மேரி மனம் கசந்தாள். அந்த நாள் முழுவதும் இனி அவள் துயரம் மேலிட்டு இருக்கப் போகிறாள்.

இந்தக் கொந்தளிக்கும் யோசனைகளுக்கு நடுவே மேரி ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அவள் உதடுகள் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டன.

''ஆம், நான் படிக்க வேண்டும்! நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் எழுதப்படிக்கப் போகிறேன்!''

தனக்குத் தானே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள். அன்று நாள் முழுவதும் இந்த வார்த்தைகளை எத்தனையோ முறை சொல்லிக் கொண்டாள்.

''அன்பு நிறைந்த கடவுளே! இந்த வயல்களிலிருந்து என்னை வெளியே அழைத்துக்கொண்டு போ... நான் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்... நான் வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இது எப்படியாகினும் நடக்க வேண்டும்.''

அது உணவுக்கான நேரம். குடும்பம் பருத்திக்காட்டைவிட்டுக் கிளம்பியது. மேரி தனது தந்தையுடன் சேர்ந்துகொள்வதற்கு ஓடிச் சென்றாள்.

''நான் பள்ளிக்கூடத்திற்குப் போக முடியுமாப்பா?''

''அடடே! மேரிச்செல்லம் இங்கே நமக்கென்று பள்ளிக்கூடமே கிடையாதேம்மா!'' அப்பாவின் குரல் வருத்தத்தில் தளர்ந்து ஒலித்தது.

''நான் படிக்கணும் அப்பா... எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளணும்னு விரும்பறேன்.'' சாம் மெக்லியோட் பதில் எதுவும் கூறவில்லை.

விரைவில், பருத்தி எடுப்பதற்கான காலமும் வந்தது. இந்த ஆண்டு பருத்தி நல்ல விளைச்சல். நல்ல விலையும் கிடைத்தது. ஆனால், மேரிஜேனுக்கு இந்த முறை அவற்றில் ஈடுபாடு வரவில்லை. காரணம், அவள் ஒரே ஒரு விசயத்தைப் பற்றி மட்டுமே தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்ததுதான்: 'எப்படி, எப்போது நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன்?'

ஆனால், அங்கே எந்த ஒரு பள்ளியும் கிடையாது. புத்தகங்கள் இல்லை. எந்த ஓர் ஆசிரியரும் இல்லை. அங்கிருந்ததெல்லாம் பருத்தி விளையும் பருவகாலம்தான். ஒரு பருவம் முடிந்து இன்னொன்று. அது முடிந்து மற்றொன்று... பின்... இன்னும் ஒன்று!

''நான் படிக்க விரும்புகிறேன். நான் படிக்க விரும்புகிறேன்.' மேரி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.அந்த வார்த்தைகள் எப்பொழுதும் அவளைச் சுற்றிக்கொண்டே திரிந்தன. பதினோரு வயதே ஆன அச்சிறு பெண் வயலிலிருந்து வீட்டை நோக்கிச் சென்று அந்தக் கனமான பருத்திப் பொதியைத் தனது முதுகிலிருந்து இறக்கி வைக்கும் போதுதான், தனக்கு அறிமுகமே இல்லாத ஒரு பெண் தன் முன்னால் நிற்பதைக் கண்டாள். அந்தப் பெண் புன்னகைத்தார்.

''நான்தான் மிஸ் வில்ஸன்..''

உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். உன்னுடைய இந்தப் பருத்தி எடுப்பு வேலைகள் முடிந்த உடனேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக மேயெஸ்வில்லிக்கு வரவேண்டும். சரியா.. மேரிக்குட்டி.. வருவாய்தானே?''

மேரி பதில் சொல்ல நா எழாமல் வாயடைத்து நின்றாள்.

பருத்தி எடுக்கும் தங்களின் வேலையைத் தொடர்வதற்காக அனைவரும் வயல்களுக்குத் திரும்பிச் சென்றனர். மேரியும் ஓடினாள். "இப்போதே வாருங்கள், சீக்கிரம்..! அதோ அந்த மூலையில்; பிறகு இங்கே, பருத்தியை எடுங்கள். மசமசவென்று நிற்காதீர்கள்.. நான் பள்ளிக்கூடத்திற்குப் போயாகவேண்டும்!'' எல்லோரையும் அவசரப்படுத்தினாள். திடுமென்று அவள் ஒரு புதிய மனுசியாக ஆகி விட்டதைப் போல மற்றவர்கள் உணர்ந்தனர்.

''அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடு! உன்னால் படிக்க முடியாது!'' என்று மேரியின் காதுகளில் இத்தனை நாள் ஒலித்துக் கொண்டிருந்த இந்த வார்த்தைகள் அவளுடைய

ஆத்மாவில் இருந்து என்றென்றைக்குமாகத் துடைத்தெறியப்படப் போகின்றன.

புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. மேரி என்றொரு பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே போய் முதன்முறையாகப் படிக்கப் போகிறாள் என்ற நம்பிக்கை! அந்தத் தலைமுறையில் படிக்கப்போகும் முதல் ஆளும் அவள்தான்.

அந்த வீட்டில் ஜன்னல் ஓரமாக கீழ்ப்பக்கம் இருந்த மேசையின்மீது தலைமுறைக் காலமாக பைபிள் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் குடும்பத்தில் எந்த ஒருவரும் எந்தக் காலத்திலும் அதைப் படிப்பதற்கு முடிந்ததே இல்லை. காரணம் யாருக்கும் படிக்கத் தெரியாது.

"இந்த பைபிளையும் இனி படித்துவிடுவேன். எல்லோருக்கும் படித்துக் காட்டவும் செய்வேன்." மேரி தனக்குத்தானே முணுமுணுத்தாள்.

மேயெஸ்வில்லியில் பெரிய கடை அது.

"உனக்கு என்ன வேண்டும் மேரிம்மா..?" சாம் அவளைக் கேட்டார்.

"எழுதுவதற்குப் பிரயோசனமான ஏதாவது ஒன்று வாங்கிக் குடுங்கப்பா."

கடைக்காரர் ஒரு சதுர வடிவ, கடினமான கறுப்புப் பலகை ஒன்றை அவர்களிடம் எடுத்துக் காட்டினார்.

"இதுதான் சிலேட். இந்தச் சிறிய வெள்ளை சாக்பீஸ் துண்டினால் நீங்கள் இந்தப் பலகையின் மீது எழுதலாம்".

இனி சிலேட்டின் மீது வெள்ளை சாக்பீஸைக் கொண்டு அவளால் கோடுகளை, படங்களை வரைய முடியும். பிறகு, எப்படி எழுதுவது என்று அவள் அறிந்துகொண்ட நிமிடத்திலிருந்து அவள் எழுதமுடியும்.. எழுதுவாள்.. எழுதுவாள்..!

அப்பாவும், மகளும் வீட்டுக்கு வந்தபோது, அனைவரும் அடுத்து வரப்போகிற நாள் குறித்தே பேசிக்கொண்டிருந்தார்கள். நாளை மேரிஜேன் பள்ளிக்கூடம் செல்லப்போகும் முதல் நாள்...!

மேரியின் சகோதரர்களும் சகோதரிகளும் சொன்னார்கள்:

"நீ எங்களுக்கும் சொல்லித்தர வேண்டும், சரியா?"

"ஓ யெஸ்..! நான் கற்றுக்கொண்டதை எல்லாம் உங்களுக்கும் சொல்லித் தருகிறேன்..!" அவள் உறுதியளித்தாள்.

அடுத்த நாள் அதிகாலையில் சீக்கிரமாகவே அவள் புறப்படத் தயாராகி விட்டாள். அப்பாவும் கூடச் சென்றார்.

மேயெஸ்வில்லிக்குப் போய்ச்சேர மேரி நடக்க வேண்டிய தூரம் ஐந்து மைல்கள். அந்தப் புழுதிபடிந்த சாலையில் ஒவ்வொரு நாளும் வீடு திரும்ப மேலும் ஐந்து மைல்கள் அவள் நடக்க வேண்டும்.

மேரிஜேன் தான் பெற்ற புதிய கல்வியினால் முக்கியமான ஒரு நபராக மாறிக்கொண்டிருந்தாள். அவளால் இப்போது கணக்குப் பார்க்கமுடியும். அவளுடைய அக்கம் பக்கத்தவர் கறுப்பின மக்கள் வெள்ளை நிற மக்கள் இருவருமே சம்பளக்கணக்கோ, கொடுக்கல் வாங்கல் குழறுபடியோ எதுவென்றாலும் மேரியிடமே கொண்டுவந்தார்கள்.

கறுப்பர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியவில்லை. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் உண்மையில் நியாயமான தொகைதானா என்று கூடக் கணக்கிடத் தெரியவில்லை. வெள்ளைக்காரர்கள் எதைக் கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொள்ள வேண்டியவர்களாகவே இருந்தார்கள் கறுப்பர்கள்.

மேரி தனது பள்ளியில் மேலும் புதிது புதிதாய்க் கற்றுக்கொண்டு வந்தாள். தனது பாதையில்தான் மெதுவாக உயர உயரப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று மனதில் அசை போடுவாள்...!

பள்ளிக்கூடத்தில் சில வருடங்கள் ஓடி மறைந்தன. அந்த வருடத்தின் கடைசியில் மேரிக்குப் பட்டமளித்தல் இருந்தது. இதுதான் தங்கள் வாழ்க்கையில் காணும் முதன்முதல் பட்டமளித்தல் விழா என்பதால்



10th_Tamil_Unit 5.indd 114 12/08/2021 6:56:57 PM

மேயெஸ்வில்லியின் மக்களுக்கு அது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பது டிப்ளோமாக்களை வழங்குவது. மதிப்புமிக்க வெள்ளைத்தாள் சுருள்களில், 'இந்தப் பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் கூடியவர்கள்' என்று எழுதப்பட்டிருக்கும்.

மேரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். மேரி தன்னுடைய டிப்ளொமாவை வாஞ்சையுடன் பெற்றுக்கொண்டாள். பூப்போல அதை ஏந்தி, தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். மேஜையிலிருந்த புத்தகத்தை, தான் கையில் எடுத்த போது அதை ஒரு சிறுமி பிடுங்கிக் கொண்ட அந்த நாள் நினைவில் ஆடியது. "உன்னால் படிக்க முடியாது" என்று அவளைத் துயரப்படுத்துவதற்கு இனி எந்த ஒருவராலும் ஒருபோதும் முடியாது என்பதில் அவள் பெருமகிழ்ச்சியடைந்தாள்.

விழா முடிந்தது. இரைச்சலும் சந்தோசமும் நிறைந்த சூழலில் மிஸ் வில்ஸன் மேரிஜேனை தோளோடு அணைத்தபடி

"மேரிஜேன்,

இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?"

"எனக்குத் தெரியவில்லை மிஸ். நான் என்னுடைய படிப்பைத் தொடர விரும்புகிறேன். கருப்பர்கள் எப்போதாகிலும் கல்லூரிக்குப் போயிருக்கிறார்களா..?"

"இல்லை, மிக அபூர்வம்தான். ஆனால், நீ போக முடியும். அதற்கு நீ முதலில் உயர்நிலைப்பள்ளிக்குப் போயாக வேண்டும்..."

மேரி தங்களுடைய சின்னஞ்சிறு வீட்டிற்குத் திரும்பியதும் தனது படிப்பை எப்படியாகிலும் தொடர்ந்தாக வேண்டுமென்று சொல்லிக்கொண்டாள். மேரி இப்போது எழுதப்படிக்கத் தெரிந்தவள்." உன்னால் படிக்க முடியாது" என்று யாராவது அவளைப் பார்த்துச் சொன்னால் இப்போது அவள் உடனே அதற்குச் சரியான பதிலடி கொடுக்க முடியும். இந்தப் பெருமித உணர்வுடனே மேரி மற்றவர்களுடன் சேர்ந்து பருத்திக்காட்டுக்கு வேலைக்குத் திரும்பினாள்.

நாட்கள் போயின. ஒருநாள், பருத்தி வயல்களை நோக்கி ஒரு பெண் வருவதைத் தூரத்திலிருந்து மேரி பார்த்தாள்." மேரி" அந்த குரலைக் கேட்டதும் தெரிந்துவிட்டது, வந்தவர் மிஸ் வில்சன் என்பது.

"உனக்கு ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன் மேரி. மேற்குப் பகுதியில் வாழ்கிற ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பினக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பியிருக்கிறார். அதைப் பெறுவதற்குரிய ஆளாக நீதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய். நீ மேல்படிப்பிற்காக டவுனுக்குப் போகவேண்டும் தயாராகு"என்றார் வில்ஸன்.

மேரி சந்தோசத்தில் குதித்தாள். வீட்டைப் பார்த்து ஓடினாள். "நான் மேல்படிப்புக்காக டவுனுக்குப் போகப்போகிறேன். பக்கத்து வீடுகளில் எல்லாம் ஓடி ஓடிச் சொன்னாள்.

பருத்தி வயல்களில் மேரிஜேனின் நாட்கள் முடிவுக்கு வந்தன.

அடுத்த பள்ளி ஆண்டின் தொடக்கம் வரப்போகிறது. இன்னும் சில நாட்களே உள்ளன. மேரி தயாரானாள். குடும்பத்தாரும் அக்கம்பக்கத்தவரும் மேரியைக் குறித்துப் பெருமிதம் அடைந்தார்கள். அவள் புறப்பட வேண்டிய நாளும் வந்தது.

"வாங்க, சீக்கிரம்..! ரயிலுக்கு நேரமாகிவிடும்.. நான் தாமதமாகப் போக விரும்பவில்லை.." வீட்டின் வாயிற்படியில் பொறுமையிழந்து தவித்து நின்றாள் மேரி. அவர்கள் எல்லோருமாக வீட்டை விட்டுப் புறப்பட்டதும் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் தனது பண்ணை வாகனத்துடன் வந்து சேர்ந்தார்.

" வண்டியில் ஏறுங்கள்..!" அவர் அன்புக் கட்டளையிட்டார்.

"இந்த மாதிரி ஒரு முக்கியமான நாளில் நீங்கள் நடந்து போகக்கூடாது..!" பாட்ஸியும் சாமும் இதை எதிர்பார்க்கவேயில்லை. வண்டி புறப்பட்டது. ஒவ்வொரு தெருவிலும் சில பேர்

வந்து கூடச் சேர்ந்துகொண்டார்கள். "சாம், கொஞ்சம் பொறு. இதோ நாங்கள் வருகிறோம்." மேலும் சிலர் புறப்பட்டனர். அந்தக் குழு மென்மேலும் பெரிதாகிக்கொண்டே சென்றது. அவர்கள் ரயில் நிலையத்தை அடைந்தபோது அங்கு இன்னும் பலரும் காத்திருந்தார்கள்.

வண்டி போய் நிலையத்தில் நின்றதுதான் தாமதம். மேரி தாவிக் குதித்து இறங்கினாள்.

"மிஸ் வில்ஸன்,மிஸ் வில்ஸன்..! இதோ, நான் இங்கே இருக்கிறேன்..!"

மேரியை அணைத்துக்கொண்ட மிஸ் வில்ஸன் அவள் செல்ல வேண்டிய இடம், சந்திக்கவேண்டிய ஆசிரியர் பற்றிய குறிப்புகளை விளக்கிச் சொன்னார்.

அந்த கௌரவத்திற்குரிய சிறுமியைச் சுற்றி ஒவ்வொருவரும் கூடி நின்றார்கள். புகைவண்டி வந்து கொண்டிருக்கிறது என்பதை மேலெழுந்து தெரிந்த புகையும் சத்தமும் அவர்களுக்குத் தெரிவித்தன.

"குட் பை மேரி"," குட் பை "

"வெற்றி உண்டாகட்டும்"

"குட் பை மேரி"

வாழ்த்தொலிகள் வந்துகொண்டே இருந்தன. எல்லோருக்கும் கை அசைத்து விடை பெற்றாள். ரயில் வேகமெடுத்தது.

## நூல் வெளி

புத்தகம் ஒன்று ஒரு சிறு பெண்ணுடன் வாழ்க்கை நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது. "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற கூற்றால் உள்ளத்தில் பெற்ற அடி, பிற்காலத்தில் சமையல் செய்தும் தோட்டமிட்டும் பொது இடங்களில் பாட்டுப்பாடியும் சிறுகச்சிறுகப் பணம் சேர்த்துக் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கிடக் காரணமானது. உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன்.

இம் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன். இவரின் இயற்பெயர் வே. குணசேகரன். வயதுவந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

**முன்தோன்றிய மூத்தகுடி**

*"கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை"*

*ஐங்குறுநூறு 188 : 2*

தூத்துக்குடி மாவட்டத்தின் கொற்கை

## கற்பவை கற்றபின்...

1. கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன். அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியவர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.
2. கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

கற்கண்டு

# கல்வி ரு

# வினா, விடை வகைகள், பொருள்கோள்

VNKP1

பல்வேறு சூழல்களில் வினாக்கள் வினவுகிறோம்; விடைகள் கூறுகிறோம். மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும்கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி நன்னூலார் விளக்கியிருக்கிறார்.

## வினாவகை

அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| அறிவினா | தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது. | மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல். |
| அறியா வினா | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது. | ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல். |
| ஐய வினா | ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது. | 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல். |
| கொளல் வினா | தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது. | 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல். |
| கொடை வினா | பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது. | 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல். |
| ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது. | "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல். |

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்
– நன்னூல்,385

"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப"
– நன்னூல்,386



10th_Tamil_Unit 5.indd 117 12/08/2021 6:56:58 PM







### விடைவகை

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.

முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சுட்டு விடை | சுட்டிக் கூறும் விடை | '**கடைத்தெரு எங்குள்ளது?**' என்ற வினாவிற்கு, '**இப்பக்கத்தில் உள்ளது**' எனக் கூறல். |
| மறை விடை | மறுத்துக் கூறும் விடை | '**கடைக்குப் போவாயா?**' என்ற கேள்விக்குப் '**போகமாட்டேன்**' என மறுத்துக் கூறல். |
| நேர் விடை | உடன்பட்டுக் கூறும் விடை | '**கடைக்குப் போவாயா?**' என்ற கேள்விக்குப் '**போவேன்**' என்று உடன்பட்டுக் கூறல். |
| ஏவல் விடை | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. | **இது செய்வாயா?**" என்று வினவியபோது, "**நீயே செய்**" என்று ஏவிக் கூறுவது |
| வினா எதிர் வினாதல் விடை | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. | '**என்னுடன் ஊருக்கு வருவாயா?**' என்ற வினாவிற்கு '**வராமல் இருப்பேனா?**' என்று கூறுவது. |
| உற்றது உரைத்தல் விடை | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். | '**நீ விளையாடவில்லையா?**' என்ற வினாவிற்குக் '**கால் வலிக்கிறது**' என்று உற்றதை உரைப்பது. |
| உறுவது கூறல் விடை | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். | '**நீ விளையாடவில்லையா?**' என்ற வினாவிற்குக் '**கால் வலிக்கும்**' என்று உறுவதை உரைப்பது. |
| இனமொழி விடை | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். | "**உனக்குக் கதை எழுதத் தெரியுமா?**" என்ற வினாவிற்குக் "**கட்டுரை எழுதத் தெரியும்**" என்று கூறுவது |



10th_Tamil_Unit 5.indd 118 12/08/2021 6:56:59 PM

## பொருள்கோள்

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் 'பொருள்கோள்' என்று பெயர். பொருள்கோள் எட்டு வகைப்படும்.

அவை ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆகியன. இவற்றுள் ஆற்றுநீர்ப் பொருள்கோள், நிரல் நிறைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகியவற்றை அறிந்து கொள்வோம்.

### 1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

எ.கா. ***'சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்***
***மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்***
***செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்***
***கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'.*** *– சீவகசிந்தாமணி*

நெற்பயிர், கருவுற்ற பச்சைப் பாம்பின் வடிவம்போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்றமக்கள் பணிவின்றித் தலை நிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று, முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

'நெல்' என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் 'காய்த்தவே' என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

பாடலின் தொடக்கம்முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள்' ஆகும்.

***'மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்***
***அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே.'*** *–நன்னூல்: 412*

### 2. நிரல்நிறைப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது 'நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

இது முறை நிரல்நிறைப் பொருள்கோள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் என இருவகைப்படும்.

#### (அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

எ.கா. ***'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது'.*** *–குறள்: 45*

இக்குறளில் அன்பு, அறன் என்ற இரு சொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக பண்பு, பயன் என்று வரிசைப்படுத்தி உள்ளார். அவற்றை இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும் அதன் பயன், அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும். எனவே, அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக – நிரல்நிறையாக – நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' எனப்படும்.



10th_Tamil_Unit 5.indd 119 12/08/2021 6:56:59 PM

### (ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

**எ.கா.** 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.' –*குறள்: 410*

இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாகக் கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றைக் கற்றார் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும். –*நன்னூல்: 414*.

### 3. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும்.

**எ.கா.** ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு. – *மயிலைநாதர் உரை*

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை – என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

***யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை***
***ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே*** –*நன்னூல்: 417*

## கற்பவை கற்றபின்...

**1. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

- "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? "இந்த வழியாகச் செல்லுங்கள்." – என்று விடையளிப்பது.
- "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.

**2. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

பாமகள்: வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)

ஆதிரை: ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்.(....................)

பாமகள்: அப்படியா! என்ன தலைப்பு? (....................)

ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர்! (....................). நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? (....................)

பாமகள்: ஏன் வராமல்? (....................)



10th_Tamil_Unit 5.indd 120 12/08/2021 6:56:59 PM

# திறன் அறிவோம்

### பலவுள் தெரிக.

1. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2. அருந்துணை என்பதைப் பிரித்தால்.....................

   அ) அருமை + துணை ஆ) அரு + துணை

   இ) அருமை + இணை ஈ) அரு + இணை

3. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ........... வினா.

   "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது .......... விடை.

   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ)அறிவினா, மறை விடை

   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

4. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி

   மருளை அகற்றி மதிக்கும் தெருளை"

   – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ......... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ..........

   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

### குறுவினா

1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"

   –இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

2. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

3. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?

இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

## சிறுவினா

1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
2. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
3. **ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

4. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## நெடுவினா

1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
2. 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.
3. தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை –

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.



10th_Tamil_Unit 5.indd 122 12/08/2021 6:56:59 PM

## மொழியை ஆள்வோம்!

### படித்துச் சுவைக்க.

*வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை*
*அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி*
*யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)*
– பாரதியார்

It gave Valluva the Great
For all the world to have;
And the fame rose sky high
Of our Tamil – Land
It made a necklace of gems,
Named 'The Lay of the Anklet'
Which grips enraptured hearts
In our Tamil – Land.
-The voice of Bharati

### மொழிபெயர்ப்பு

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| *அறைக்குள் யாழிசை*<br>*ஏதென்று சென்று*<br>*எட்டிப் பார்த்தேன்;*<br>*பேத்தி,*<br>*நெட்டுருப் பண்ணினாள்*<br>*நீதிநூல் திரட்டையே.*<br>பாரதிதாசன் | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation.<br>*Translated by* Kavignar Desini |

lute music – *யாழிசை*
chamber – ............................
to look up – ............................
grand-daughter – ............................
rote – ............................
didactic compilation – ............................

### அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | கதையைச் சொன்னார் |
| தா | | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | |
| பார் | துளிர் பார்த்தாள் | | பார்த்துச் சிரித்தாள் | | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | | குழந்தையே வா! | |

### தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**எ.கா.** அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.



10th_Tamil_Unit 5.indd 123 12/08/2021 6:56:59 PM

**மதிப்புரை எழுதுக.**

*பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.*

*குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு– நூல் ஆசிரியர்*

**படிவத்தை நிரப்புக.**

### நூலக உறுப்பினர் படிவம்

## _______________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ______________________________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் | உறுப்பினர் எண் [ ]

1. பெயர் ______________________
2. தந்தை பெயர் ______________________
3. பிறந்த நாள் ______________________
4. வயது ______________________
5. படிப்பு ______________________
6. தொலைபேசி எண் ______________________
7. முகவரி ______________________
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ______________________

நான் ______________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ________, சந்தா தொகை ரூ________ ஆக மொத்தம் ரூ. ________ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன்________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)



10th_Tamil_Unit 5.indd 124 12/08/2021 6:57:00 PM

## மொழியோடு விளையாடு

**புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

*தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை*
*பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை*
*சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை*
*சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை*
*வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன்.* *நான் யார்?*

**தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ______ யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் _____ நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல்; புதைத்தல்)
2. காட்டு விலங்குகளைச் ______ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ______ திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
3. காற்றின் மெல்லிய ______ பூக்களைத் தலையாட்டவைக்கிறது. கைகளின் நேர்த்தியான ______ பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)
4. பசுமையான _______ஐக் ________ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
5. பொதுவாழ்வில் ____ கூடாது. ____இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**அகராதியில் காண்க.**

மன்றல், அடிச்சுவடு, அகராதி, தூவல், மருள்

### செயல்திட்டம்

"பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

**காட்சியைக் கவிதையாக்குக.**



_______________________________
_______________________________
_______________________________
_______________________________
_______________________________

## நிற்க அதற்குத் தக...


| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | |
| | |
| | |

## கலைச்சொல் அறிவோம்

Emblem – சின்னம்
Thesis – ஆய்வேடு
Intellectual – அறிவாளர்
Symbolism – குறியீட்டியல்

## அறிவை விரிவு செய்

சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று – தமிழில் வல்லிக்கண்ணன்
குட்டி இளவரசன் – தமிழில் வெ.ஸ்ரீராம்
ஆசிரியரின் டைரி – தமிழில் எம்.பி. அகிலா








## இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2021-html-p202162-28161
http://www.tamilhindu.com/2009/10/gu_pope_and_thiruvasagam/
http://www.tamilsurangam.in/literatures/pathinen_keezhkanakku/thirikadugam.html